Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلّی علی رسوله الكريم　　وعلیٰ عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ


தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 15

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

15 ரஜப் 1438 ஹிஜ்ரி கமரி　13 ஷஹாதத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

13 ஏப்ரல் 2017


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இஸ்லாம் வீழ்ச்சியடையும் சமயத்தில் மற்றும் வழிகேடு பரவுகின்ற காலத்தில் நேரடியாக இறைவனிடமிருந்து நேர்வழியைப் பெறுகின்ற அந்த இறுதி மஹ்தியும், அந்த வானத்து உணவுத் தட்டை புதிய வடிவில் மனிதர்களுக்கு முன்னால் எடுத்து வைப்பவராக இறை நியதியில் நியமிக்கப்பட்டவரும் எவரைப் பற்றி இன்றிலிருந்து ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் நற்செய்தி வழங்கி இருந்தார்களோ அவரும் நானே ஆவேன்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இறைவன், காலத்தின் தற்போதைய நிலைமையைப் பார்த்து பூமி பல வகையான தீமைகளாலும், பாவத்தாலும், வழிகேட்டாலும் நிரம்பி இருப்பதைக் கண்டு உண்மையை எட்ட வைப்பதற்காகவும், சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்காகவும் என்னை நியமித்துள்ளான். மேலும், இந்தக் காலமும் அப்படிப்பட்டதாகவே இருந்தது. அதாவது......... இந்த உலகிலுள்ள மக்கள் ஹிஜிரி பதிமூன்றாம் நூற்றாண்டை நிறைவடைய செய்து விட்டு பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தை அடைந்திருந்தனர். அப்போது நான், அந்த (இறை) கட்டளையைப் பேணியவாறு பொதுமக்களை எழுத்துப்பூர்வமான பிரசுரங்கள் மற்றும் சொற்பொழிவுகள் மூலமாக இவ்வாறு குரல் கொடுத்து அழைக்க ஆரம்பித்தேன். அதாவது, இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக இறைவன் புறமிருந்து எவர் வரவேண்டியதிருந்ததோ அவர் நானே ஆவேன். அதன் மூலம் பூமியிலிருந்து உயர்ந்து சென்று விட்ட அந்த ஈமானை மீண்டும் நான் நிலைநாட்ட வேண்டும். மேலும், இறைவனிடமிருந்து ஆற்றலைப் பெற்று அவனது கைகளில் உள்ள ஈர்ப்பின் மூலமாக உலகை சீர்திருத்தம், இறையச்சம் மற்றும் உண்மையின் பக்கம் ஈர்க்க வேண்டும். அவர்களது கொள்கை அளவிலான மற்றும் செயலளவிலான தவறுகளை அகற்ற வேண்டும். இவ்வாறு நான் அறிவித்து சில வருடங்கள் கழிந்ததும் ஆரம்பத்திலிருந்தே இந்த உம்மத்திற்காக வாக்களிக்கப்பட்டிருந்த மஸீஹும் இஸ்லாம் வீழ்ச்சியடையும் சமயத்தில் மற்றும் வழிகேடு பரவுகின்ற காலத்தில் நேரடியாக இறைவனிடமிருந்து நேர்வழியைப் பெறுகின்ற அந்த இறுதி மஹ்தியும், அந்த வானத்து உணவுத் தட்டை புதிய வடிவில் மனிதர்களுக்கு முன்னால் எடுத்து வைப்பவராக இறை நியதியில் நியமிக்கப்பட்டவரும், எவரைப் பற்றி இன்றிலிருந்து ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் நற்செய்தி வழங்கியிருந்தார்களோ அவரும் நானே ஆவேன் என்பது இறைவனின் வஹியின் மூலம் எனக்கு தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. இது பற்றி இறைவனின் உரையாடல்களும், ரஹ்மான் என்னை நோக்கிக் கூறியவையும் எந்த அளவு தெளிவானவையாகவும் தொடர்ச்சியானவை -யாகவும் நிகழ்ந்தன என்றால் அதில் சந்தேகத்திற்கான இடமே இருக்கவில்லை. எனக்கு வந்த ஒவ்வோர் இறையறிவிப்பும் ஒரு பசுமரத்தாணி போன்று உள்ளத்தில் பதிந்து விட்டது. இறைவனின் இந்த எல்லா உரையாடல்களும் எத்தகைய மகத்தான முன்னறிவிப்புகளால் நிரம்பியிருந்தன என்றால், அவை ஒளிமயமான பகல் போன்று நிறைவேறின. அவற்றின் தொடர்ச்சியும் அவை அதிகமாக இருப்பதும் அவற்றின் அற்புத ஆற்றல்களின் அதிசயங்களும் எந்த இறைவனின் வார்த்தைகளாக திருக்குர்ஆன் இருக்கின்றதோ அதே ஏகனும் இணையற்றவனுமாகிய இறைவனின் வார்த்தையாகத்தான் அவை இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்கின்ற கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கி விட்டது. நான் இந்த இடத்தில் தவ்ராத் மற்றும் இஞ்சீலின் பெயரைக் கூறவில்லை. ஏனென்றால், தவ்ராத்தும் இஞ்சீலும் மாற்றங்களை ஏற்படுத்துபவர்களின் கைகளால் எந்த அளவு மாற்றப்பட்டு விட்டன என்றால், இப்போது அந்த வேதங்களை இறைவனின் வார்த்தைகள் என்று கூற முடியாது. சுருக்கமாக, என் மீது இறங்கியுள்ள இறையறிவிப்பு எந்த அளவு உறுதியானதும் மாற்றமில்லாததுமாக இருக்கின்றது என்றால் அதன் மூலமாக நான் என் இறைவனைப் பெற்றுக் கொண்டேன். அந்த இறையறிவிப்பானது வானத்தின் அடையாளங்கள் மூலமாக நிச்சய உறுதியின் உயர் தகுதியை மட்டும் அடைந்திருக்கவில்லை. மாறாக, அதன் ஒவ்வொரு பகுதியையும் இறைவனின் வார்த்தையாகிய திருக்குர்ஆனின் முன்னால் எடுத்து வைக்கும்போது அவை அதற்கேற்ப இருந்தது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் அதை உண்மைப்படுத்துவதற்காக மழையைப் போன்று வானத்தின் அடையாளங்கள் பொழிந்தன. மஹ்தியின் காலத்தில் ரமலான் மாதத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் ஏற்படும் என்று எழுதப்பட்டிருந்தது போன்றே இதே நாட்களில் ரமலான் மாதத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் நிகழ்ந்தது. மேலும், பிளேக் நோய் கூட அதிகமாக பஞ்சாபில் பரவியது. திருக்குர்ஆனிலும் இது பற்றிய செய்தி காணப்படுகின்றது. இந்த நாட்களில் அதிகமாக கொள்ளை நோய் பரவும். எந்த அளவுக்கு பரவும் என்றால் எந்தவொரு கிராமமும் நகரமும் இந்தக் கொள்ளை நோயின் (பிடியிலிருந்து) வெளியில் இருக்காது என்று கடந்து கால நபிமார்களும் கூட செய்தி தெரிவித் -திருந்தனர். அவ்வாறே நிகழ்ந்தது; நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

(தத்கிரதுஷ் ஷஹாததைன். ரூஹானி கஸாயீன் தொகுதி 20 பக்கம் 3,4)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ்வின் அருளால் இப்போது உலகில் பல நாடுகளில் ஜாமிஆ அஹ்மதிய்யா என்ற மார்க்கக் கல்லூரிகள் நிறுவப்பட்டு விட்டன. இங்கிருந்து முரப்பிகள் தமது கல்வியை நிறைவு செய்த பிறகு செயற்களத்திற்கு வந்து விட்டார்கள்; வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜமாஅத்திற்கு முரப்பிகள் மற்றும் முபல்லிக்குகளின் தேவை இருக்கின்றது. இந்த தேவை மிகவும் அதிகரித்துக் கொண்டும் இருக்கிறது. இன்னும் சொல்வதாயின் அதிகரித்து விட்டது. எனவே, அதிகமாக வாகி.்.பீனே நவ் பிள்ளைகள் ஜாமிஆ அஹ்மதிய்யாவுக்கு கல்வி பயில வர வேண்டும். பெற்றோர் சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு இதன் பக்கம் கவனமூட்ட வேண்டும். அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். அவர்களுக்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேரும் ஆர்வம் ஏற்படும் அளவுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும்.

முரப்பிகள் முதலில் நினைவில் கொள்ள வேண்டியது என்னவெனில், அவர்கள் நிர்வாக அடிப்படையில் எவர் அவர்களுக்கு மேலதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறாரோ அவருக்கு கட்டுப்பட வேண்டும்.

தலைவர்கள் மற்றும் அமீர்களுக்கும் நான் கூறுகிறேன். முரப்பிகளின் கண்ணியத்தையும் மரியாதையையும் நிலைநாட்டுவது உங்கள் பணியாகும். எந்த ஜமாஅத்திலும் முரப்பிகளுக்கு கண்ணியமும் மரியாதையும் எல்லாரையும் விட அதிகமாக செய்பவரும், ஒத்துழைப்புடனும், ஆலோசனையுடனும் நடப்பவரும் ஜமாஅத்தின் தலைவர் அல்லது ஜமாஅத்தின் அமீர் ஆகவே இருக்க வேண்டும். அதேபோன்று மற்ற பொறுப்பாளர்களும் தத்தமது வட்டத்தில் முரப்பிகளுடன் ஒத்துழைப்பவராகவே இருக்க வேண்டும். முரப்பியும் கூட முழுமையான பணிவு மற்றும் தக்வாவுடன் ஜமாஅத்தின் சத்ர் மற்றும் அமீருடன் முழுமையாக ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதில் தக்வா மட்டுமே உண்மையான, ஒப்புக் கொள்ளப்படத்தக்க தொண்டு செய்வதற்கான வாய்ப்பை வழங்க முடியும்.

ஜமாஅத் தலைவர், அமீர் மற்றும் பிற பொறுப்பாளர்களின் பணி இன்னும் சொல்வதென்றால் அவர்களது பொறுப்பு என்னவென்றால், முபல்லிக்மார்கள் மட்டுமல்ல; எத்தனை வாழ்வை அர்ப்பணித்தவர்கள் உள்ளனரோ அவர்கள் அனைவர் மீதும் மதிப்பு மரியாதையை உங்கள் உள்ளத்திலும் உருவாக்குங்கள். ஜமாஅத் மக்களின் உள்ளத்திலும் உருவாக்குங்கள். அவர்களை கண்ணியப்படுத்துவதும், கண்ணியப்படுத்த வைப்பதும் உங்கள் பணியாகும். அதன் மூலமே முரப்பி, முபல்லிக், வாழ்வை அர்ப்பணித்தோர் ஆகியோர்களின் முக்கியத்துவம் தெளிவாகும். அதிகமாக இளைஞர்கள் அதிகமான ஜமாஅத் பணிகளில் தம்மை அர்ப்பணிப்பார்கள்.

வாழ்வை அர்ப்பணித்த இளைஞர்களிடம், செயற்களத்தில் உள்ள இளைஞர்களான முரப்பிகளிடம் நான் கூற விரும்புகிறேன். உலகம் உங்கள் அந்தஸ்தை புரிந்தாலும் சரி, புரியா விட்டாலும் சரி. ஒரு சத்ர் அல்லது அமீர் அல்லது பொறுப்பாளர் அல்லது எந்தவொரு ஜமாஅத் நபராகவே இருப்பினும் அவர்கள் உங்களை கண்ணியப்படுத்தினாலும், கண்ணியப்படுத்தாவிட்டாலும் நீங்கள் அல்லாஹ்விடம் தியாகம் செய்வதாக வாக்களித்துள்ளீர்கள். அதனை நல்ல நிய்யத்துடன் நிறைவேற்றி வாருங்கள்.

ஜமாஅத்தின் எந்த பொறுப்பும் எந்த வகையிலும் பெருமைப்படுத்துவதற்காக தரப்படவில்லை. மாறாக, பணிவை வளர்ப்பதற்காகவே தரப்பட்டுள்ளது. ஆகவே ஒவ்வொரு முடிவு மற்றும் ஒவ்வொரு பணியையும் அல்லாஹ்வின் அச்சத்தை உள்ளத்தில் கொண்டவாறு மிகவும் பணிவுடன் நேர்மையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியவாறு செய்ய முயற்சிக்க வேண்டும். அதுபோன்று கிளை அமைப்பின் பொறுப்பாளர்களும் தமது பொறுப்பை உணர வேண்டும். கிளை அமைப்பும் அன்ஸாரும், லஜ்னா, குத்தாம் ஆகியோர் எல்லா மட்டத்திலும் செயற்துடிப்புடன் இருக்க வேண்டும். ஒவ்வொரு பொறுப்பாளரும் மார்க்கப் பணியை இறைவனது பேரருளாகக் கருதி செய்ய வேண்டும். ஒருவர் மற்றவருக்கு ஒத்துழைப்பும் நல்க வேண்டும். ஜமாஅத் அமைப்பு, தலைவர்கள், அமீர்மார்கள் மற்றும் கிளை அமைப்புகள் இவற்றுக்கிடையில் பரஸ்பரம் ஒத்துழைப்பு இருக்க வேண்டும். இந்தப் பரஸ்பர ஒத்துழைப்பும் இருந்தால் மேலும் எல்லா கிளை அமைப்பும், ஜமாஅத் அமைப்பும் செயற்துடிப்புடையதாகி விட்டால், பிறகு ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் வேகம் பன்மடங்கு அதிகமாகும்.

ஜமாஅத் மக்களிடம் நான் கூற விரும்புகிறேன். அவர்களும் தமது தக்வாவின் தரத்தை அதிகமாக்க வேண்டும். நன்மை மற்றும் தக்வாவில் ஒத்துழைக்குமாறு அவர்களுக்கும் கட்டளையிடப்பட்டுள்ளது. ஜமாஅத் மக்களின் தக்வா மற்றும் நன்மையின் தரம் அதிகமாக இருக்கும்போது பிறகு தானாகவே நன்மை மற்றும் தக்வா உடைய பொறுப்பாளர்கள் கிடைத்துக் கொண்டிருப்பர்.

ஒவ்வொரு ஜமாஅத் நபரும் தமது ஜமாஅத்தின் கடமையை நிறைவேற்ற வேண்டும். அது அவர் மீது கட்டுப்படுதல் என்ற முறையில் தரப்பட்டுள்ளது. நீங்கள் கட்டுப்படுங்கள் என்று ஜமாஅத் பொறுப்பு தந்துள்ளது. உங்களது கட்டுப்படுதலின் முன்மாதிரி உங்களை ஜமாஅத்தின் தொடர்பில் உங்களுக்கு முன்னேற்றத்தைத் தரும் அதே வேளையில் அது உங்கள் சந்ததிகளையும் ஜமாஅத்துடன் இணைத்து வைக்கும். சந்ததிகளின் தக்வாவின் தரம் உயர்ந்து அது அதிகமாகும். பிறகு வருங்காலத் தலைமுறைகளிலும் தக்வாவின்படி நடப்பவர்கள் கிடைத்துக் கொண்டேயிருப்பார்கள்.

திருக்குர்ஆன், நபிமொழிகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) ஆகியோரின் கட்டளைகளின் ஒளியில் அமீர்கள், ஜமாஅத் தலைவர்கள், ஜமாஅத்தின் மற்றும் கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்கள், முரப்பிகள், முபல்லிக்குகள் ஆகியோருக்கு ஹுஸுர் அவர்கள் வழங்கியுள்ள முக்கிய போதனைகள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**10 மார்ச் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **10 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

அல்லாஹ்வின் அருளால் இப்போது உலகில் பல நாடுகளில் ஜாமிஆ அஹ்மதிய்யா என்ற மார்க்கக் கல்லூரிகள் நிறுவப்பட்டு விட்டன. இங்கிருந்து முரப்பிகள் தமது கல்வியை நிறைவு செய்த பிறகு செயற்களத்திற்கு வந்து விட்டார்கள்; வந்து கொண்டிருக்கிறார்கள். முதலில் ரப்வா மற்றும் காதியானில் மட்டும் ஜாமிஆக்கள் இருந்தன. இங்கிருந்தே ஷாஹித் பட்டம் பெற்றவர்களும் முரப்பிகளும் வந்து கொண்டிருந்தார்கள்.

கடந்த நாட்களில் யூ.கே –வின் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடந்தது. கனடா மற்றும் யூ.கே ஜாமிஆக்களுக்கு சேர்த்து ஒரே பட்டமளிப்பு விழாவாக அது நடந்தது. தேர்ச்சி பெற்றவர்களுக்காக அது நடந்தது. இந்த ஷாஹித் பட்டத்தைப் பெற்றவாறு முரப்பி என்ற வகையில் தம்மை மார்க்கத்திற்காக அர்ப்பணிப்பவர்கள் இங்கு மேற்கத்திய நாடுகளில் வளர்ந்து இங்கேயே பள்ளிப் படிப்பை முடித்து ஜாமிஆவில் படிப்பதற்காக தம்மை அர்ப்பணித்தவர்களாவர். மேலும் இதில் வெற்றியும் பெற்றுள்ளார்கள். இவர்களுள் பெரும்பாலார் இன்னும் சொல்வதாயின், பெரும்பாலும் எல்லாருமே வக்ஃபே நவ் திட்டத்தில் உள்ளவர்களாவர்.

மேற்கத்திய நாடுகளில் இருந்தவாறு உலகியல் மினுமினுப்புகள் உச்சத்தில் இருக்கக்கூடிய ஓரிடத்தில் தம்மை அர்ப்பணித்தவாறு அல்லாஹ்வின் மார்க்கத்தின் படை வீரராக தம்மை அவர்கள் அர்ப்பணித்துள்ளனர். இது நிச்சயமாக அவர்களின் நற்பேறாகும். மேலும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்ற உடன்படிக்கையை நிறைவேற்றுதலின் வெளிப்பாடு ஆகும். ஆனால், இது அல்லாஹ்வின் அருள் இல்லாமல் சாத்தியமில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, இவர்களுக்கும் இப்போது மேற்கத்திய நாடுகளில் ஜாமிஆக்களில் படிப்பவர்களுக்கும், மற்ற நாடுகளின் ஜாமிஆக்களில் படிக்கும் மாணவர்களுக்கும் சரி அவர்கள் தமக்குள் ஒரு பணிவை உருவாக்கியவாறு கலப்பற்ற முறையில் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாக வேண்டும். அவன் முன்னால் குனிந்தவாறு அவனது அருளை எப்போதும் தேடிக் கொண்டிருக்க வேண்டும். அதுபோன்று நான் ஜாமிஆ அஹ்மதிய்யா –வின் பட்டமளிப்பு விழாவிலும் கூட கூறினேன்.

ஜமாஅத்திற்கு முரப்பிகள் மற்றும் முபல்லிக்கு –களின் தேவை இருக்கின்றது. இந்த தேவை மிகவும் அதிகரித்துக் கொண்டும் இருக்கிறது. இன்னும் சொல்வதாயின் அதிகரித்து விட்டது. எனவே, அதிகமாக வாகிஃபீனே நவ் பிள்ளைகள் ஜாமிஆ அஹ்மதிய்யாவுக்கு கல்வி பயில வர வேண்டும். பெற்றோர் சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு இதன் பக்கம் கவனமூட்ட வேண்டும். அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். அவர்களுக்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேரும் ஆர்வம் ஏற்படும் அளவுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும்.

இப்போது ரப்வா மற்றும் காதியான் மட்டுமின்றி அல்லாஹ்வின் அருளால் யூ.கே மற்றும் ஜெர்மனியிலும் ஜாமிஆ உள்ளது. இவற்றில் ஐரோப்பாவில் வசிக்கக் கூடியவர்கள் கல்வி பெறலாம். கனடாவிலும் ஜாமிஆ அஹ்மதிய்யா உள்ளது. அங்கு அரசின் முறையான அனுமதி பெறப்பட்டு விட்டது. அங்கு வேறு சில நாடுகளில் இருந்தும் மாணவர்கள் வரலாம்; வந்தும் உள்ளனர். கானாவிலும் ஜாமிஆ அஹ்மதிய்யா உள்ளது. அங்கு இவ்வருடம் ஷாஹித் பட்டம் பெற்று மாணவர்கள் முதன் முதலாக வெளியேறுவர். இங்கு மாணவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வந்து படிக்கிறார்கள்.

பங்களாதேஷிலும் ஜாமிஆ அஹ்மதிய்யா உள்ளது. இந்தோனேஷியாவிலும் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஷாஹிது கோர்ஸ் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, வாகிஃபீனே நவ் பிள்ளைகள் ஜாமிஆவில் சேர முயற்சி செய்ய வேண்டும். நான் கூறியது போன்று அவர்களது பெற்றோரும் அதற்கேற்ப அவர்களை தயார் செய்ய வேண்டும். ஜாமிஆக்களில் நமக்கு எவ்வளவு இடம் உள்ளதோ அந்த அளவுக்காவது நிரம்ப வேண்டும். அப்போதுதான் முபல்லிக் மற்றும் முரப்பிகளின் தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். இப்போது நான் செயற்களத்திற்கு வரும் முரப்பிமார்களின் சிந்தனையில் வரும் சில கேள்விகளைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் கேட்கிறார்கள். அதனை குறிப்பிட விரும்புகிறேன். இந்த முரப்பிகளுக்கும் முபல்லிக்கு –களுக்கும் நான் கூறியே வந்துள்ளேன். அவர்களின் கேள்விகளுக்கு பதிலும் தந்து வருகிறேன்.

இங்கு இதனைக் கூறுவது ஏன் அவசியம் என்றால் ஜமாஅத்தின் அமைப்பிலுள்ள பொறுப்பாளர் –களுக்கும் கூட ஒருவருக்கொருவர் ஒத்துழைத்தவாறு எவ்வாறு பணியைச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகவே கூறுகிறேன். அதாவது முரப்பிகள் மற்றும் முபல்லிக்குகளுக்கும், பொறுப்பாளர்களுக்கும் இடையில் ஒத்துழைப்புகளில் குறிப்பாக தலைவர்கள், அமீர்கள் சில வேளைகளில் பொறுப்பாளர்களுடன் தவறான புரிதல்களின் காரணமாக சில சிக்கல்கள் உருவாகின்றன. ஒருவருக்கொருவர் தொடர்புகளில் பூரண ஒத்துழைப்புடன் இருப்பதில்லை அல்லது ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்ற எண்ணம் ஒரு சாராருக்கு ஏற்பட்டு விடுகிறது.

முரப்பிகளின் கேள்வி எவ்வாறு வருகிறது எனில் எமது பணிகளில் எந்த அளவுக்கு ஜமாஅத்தின் தலைவர் தலையிடலாம்? எங்களுக்கு என்ன வரம்புகள் உள்ளன? அவர்களுக்கு என்ன வரம்புகள் உள்ளன? சில வேளைகளில் முரப்பி ஒரு விஷயத்தை தர்பிய்யத்திற்கு தேவையானதாகக் கருதியவாறு அதனை ஜமாஅத்தில் நடைமுறைப்படுத்த முயற்சி செய்கிறார். ஜமாஅத்தின் தலைவர் இதனை இவ்வாறுதான் செய்ய வேண்டும் என்று நான் கருதவில்லை என்கிறார் அல்லது சில தலைவர்கள் தமது இயல்பின் அடிப்படையிலும் மிக நீண்ட காலம் தலைவராக இருந்ததன் காரணமாக தாம் சொல்வதே சரி என்று நினைக்கிறார்கள். முரப்பி தமது விருப்பத்திற்கேற்பதான் நடக்க வேண்டும் என்று நினைக்கிறார். சில வேளை மக்களுக்கு முன்னால் சபையிலேயே முரப்பிகளிடம் எத்தகைய கேள்வியைக் கேட்கிறார்கள் அல்லது பேசுகிறார்கள் என்றால் அவ்வாறு அவர்கள் செய்யக் கூடாது. இளைஞராக இருக்கக்கூடிய முரப்பி இதனால் துன்பப்படுகிறார். அதனை தவறாக நினைக்கிறார். துக்கமாக உணர்கிறார் அல்லது அவர் அதற்கு பதில் சொல்லி விடுவதும் கூட நடக்கலாம்.

முரப்பிகள் முதலில் நினைவில் கொள்ள வேண்டியது என்னவெனில், அவர்கள் நிர்வாக அடிப்படையில் எவர் அவர்களுக்கு மேலதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறாரோ அவருக்கு கட்டுப்பட வேண்டும். தமது கீழ்ப்படிதலின் முன்மாதிரியைக் காட்ட வேண்டும். அத்தகைய நிலை ஏற்பட்டால் அமைதியாக இருக்க வேண்டும். ஜமாஅத்தின் மக்களிடம் எந்த எதிர்மறையான தாக்கமும் ஏற்படாமல் இருப்பதற்காக அவ்வாறு செய்ய வேண்டும். ஜமாஅத்தில் நிம்மதியின்மை உருவாகக் கூடாது. ஏதாவது எல்லை மீறிய விஷயம் நடந்தால் தேசிய அமீர் அல்லது தலைவரிடம் கூறுங்கள் அல்லது தலைமையகத்திடம் கூறலாம். எனக்கும் கூட எழுதலாம்.

அதேபோன்று தலைவர்கள் மற்றும் அமீர்களுக்கும் நான் கூறுகிறேன். முரப்பிகளின் கண்ணியத்தையும் மரியாதையையும் நிலைநாட்டுவது உங்கள் பணியாகும். ஒவ்வொரு ஜமாஅத்திலும் முரப்பிகளுக்கு கண்ணியமும் மரியாதையும் எல்லாரையும் விட அதிகமாக செய்பவரும், ஒத்துழைப்புடனும், ஆலோசனையுடனும் நடப்பவரும் ஜமாஅத்தின் தலைவர் அல்லது ஜமாஅத்தின் அமீர் ஆகவே இருக்க வேண்டும்.

அதேபோன்று மற்ற பொறுப்பாளர்களும் தத்தமது வட்டத்தில் முரப்பிகளுடன் ஒத்துழைப்பவ –ராகவே இருக்க வேண்டும். முரப்பியும் கூட முழுமையான பணிவு மற்றும் தக்வாவுடன் ஜமாஅத்தின் சத்ர் மற்றும் அமீருடன் முழுமையாக ஒத்துழைப்பு நல்க வேண்டும். நமது நோக்கம் ஒன்றுதான். ஜமாஅத் மக்களுக்கு கல்வியும், தர்பிய்யத்தும் வழங்குதல் ஜமாஅத் அமைப்பின் கண்ணியத்தை நிலைநாட்டுதல், கிலாஃபத்துடன் தொடர்பை ஏற்படுத்துதல், ஏகத்துவத்தை நிலைநாட்டுதல், இஸ்லாத்தின் உண்மையான போதனையை உலகில் பரப்புதல் ஆகிய இவற்றில் வரம்புகள், உரிமைகளின் கேள்வி எதற்கு? ஒருவருக்கொருவர் ஒன்றாக இணைந்து பணியாற்ற வேண்டும். இதுபற்றி அல்லாஹ் உடைய அடிப்படை வழிகாட்டலை கவனத்தில் கொள்ள வேண்டும். வதஆவனூ அலல் பிர்ரி வத்தக்வா – அதாவது நன்மையிலும் இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்குங்கள். ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யுங்கள். ஜமாஅத்திற்கு எந்த வகையில் தொண்டாற்றும் வாய்ப்பு கிடைத்தாலும் அதனை விட பெரிய நன்மை எதுவும் இல்லை என்பதை ஒவ்வொருவரும் அறிவர். தொண்டு செய்வதற்கு தக்வா அவசியமாகும். ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதில் தக்வா மட்டுமே உண்மையான, ஒப்புக் கொள்ளப்படத்தக்க தொண்டு செய்வதற்கான வாய்ப்பை வழங்க முடியும்.

இந்தப் பணியே அல்லாஹ்வின் பயத்தை மனதில் கொண்டவாறு இறைவனது திருப்தியை மேற்கொண்டவாறுதான் செய்யப்பட முடியும். முபல்லிக்குகளுக்கும், பொறுப்பாளர்களுக்கும் கூட நிலைநிறுத்தப்பட்டுள்ள வரம்பு என்னவென்றால், நன்மையைப் பெறுதல் மற்றும் தக்வாவின்படி நடப்பதேயாகும். அதன் மூலம் ஒருவருக்கொருவர் அன்பு சகோதரத்துவ உறவு நிலைநாட்டப்பட வேண்டும். அதே வேளையில் ஜமாஅத்தின் அறிவு மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திலும் கூட இருவரும் தத்தமது பங்கை செலுத்த வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: வதஆவனூ அலல் பிர்ரி வத்தக்வா என்பதன் பொருள் பலவீனமான சகோதரர்களின் சுமையைச் சுமக்க வேண்டும். அவர்களை செயல் மற்றும் ஈமானிய பலவீனங்களில் இருந்து அகற்றுவதற்கு உங்களுடன் இணைத்துக் கொள்ளுங்கள். உடலியல் பலவீனங்களிலும் சிகிச்சை செய்யுங்கள். ஜமாஅத் மக்கள் பற்றி வேதனையைக் கொண்டவாறு ஜமாஅத்தின் பொறுப்பாளர்களும் முரப்பிமார்களும் கலந்து உறவாடி பணி செய்யும்போதுதான் இது சாத்தியமாகும். செயல் பலவீனங்கள் அல்லது ஈமானிய பலவீனங்களில் இணைந்திருங்கள் என்பதற்கு நீங்களும் அவர்களைப் போன்று ஆகி விடுங்கள் என்று பொருளல்ல. மாறாக, செயல்ரீதியாகவும், ஈமான் ரீதியாகவும் உள்ள பலவீனங்களை அகற்றுவதற்கு ஜமாஅத்தின் தலைவரும் பொறுப்பாளர்களும் தமது வட்டத்திற்கேற்ப செயல்பட வேண்டும். முரப்பிகளுள் மார்க்க அறிவு அதிகமாக இருப்பதன் காரணமாகவும் மற்றும் தர்பிய்யத்திற்காகவும் அவர்கள் காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதிகளாக இருக்கின்றதன் அடிப்படையிலும் அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளை அவர்கள் செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் விளக்கியுள்ளார்கள்: ''பலவீனமானவர் –களுக்கு ஆற்றல் உள்ளவர் உதவி செய்யாதவரை ஒரு ஜமாஅத், ஜமாஅத் ஆக இருக்க முடியாது. ஆகவே ஜமாஅத் அமைப்பு அதற்காகவே உருவாக்கப்படுகிறது. ஜமாஅத் மக்களின் ஆன்மீக அறிவு மற்றும் உடலியல் மேம்பாட்டிற்காக நிகழ்ச்சிகளை உருவாக்க வேண்டும்''.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''பெரியவர்கள் சிறியவர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும். இனிமையாகப் பழக வேண்டும்''. பொறுப்பாளர்கள் குறிப்பாக தலைவர்கள் அமீர்களுக்கு ஜமாஅத் மக்களுடன் உள்ள தொடர்பில் சில விஷயங்கள் எவ்வளவு அவசியமோ அதேபோன்று ஜமாஅத்தின் தலைவருக்கும் முரப்பிக்கும் இடையிலுள்ள தொடர்புக்கும் அவை அவசியமாகும்.

நன்மை மற்றும் தக்வாவுடன் ஒருவர் மற்றவருடன் பழகுகிற காரணத்தால் ஜமாஅத் மக்களுக்கு முன் நல்ல முன்மாதிரி நிலைநாட்டப்படும். ஜமாஅத் மக்களின் அறிவு மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு இது அவசியமாகும். பார்வைக்கு வருகிற விஷயங்களுள் நமக்கு தெரிய வருவது என்னவென்றால், சில வேளைகளில் பொறுப்பாளர்கள் அல்லது தலைவர்கள் மற்றும் முரப்பிகளுக்கு இடையிலுள்ள தொடர்பில் அணுவளவு குறைபாடு ஏற்பட்டாலும் அங்கு ஷய்த்தான் இடையில் நுழைவதற்கு முயற்சி செய்கிறான். நன்மை மற்றும் தக்வாவின் வேர் அசையத் தொடங்குகிறது. சிலர் முரப்பியின் அனுதாபியாகி ஜமாஅத்தின் தலைவர் உங்களுடன் நல்ல முறையில் நடக்கவில்லை என்று கூறுகின்றனர். இன்னும் சிலர், ஜமாஅத்தின் தலைவரிடம் முரப்பி இவ்வாறு நடந்திருக்கக் கூடாது என்று கூறுகின்றனர். எவர்களுக்கு சீர்திருத்தம் வழங்குவது ஜமாஅத்தின் தலைவர் மற்றும் முரப்பிகளின் பணியாக இருக்கின்றதோ அவர்களுக்குள்ளேயே சிலர் தலைவருக்கும் முரப்பிக்கும் இடையே விரிசலையும் இடைவெளியை –யும் உருவாக்க விரும்புகின்றனர். அதன் விளைவாக மக்களிடம் நிம்மதியின்மை உருவாகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''பாருங்கள். ஒருவர் மற்றவரை சாப்பிட்டுக் கொண்டிருந்தால் ஒரு ஜமாஅத், ஜமாஅத்தாக இருக்காது. நான்கு பேர் ஒன்றாக உட்கார்ந்து கொண்டு தமது பலவீனமான ஒரு சகோதரரைப் பற்றி விமர்சித்துப் பேசுவது, அவரது

குறையைப் பேசுவது ஒருபோதும் கூடாது. மாறாக, ஒன்று கூடலில் சக்தி பிறக்க வேண்டும். ஒன்று திரண்டு ஒன்றாக ஆகி விடுங்கள். அதன் மூலம் சக்தியை உருவாக்குங்கள். அதன் மூலமே ஒருமைப்பாடு உருவாகும். அன்பும் பரக்கத்துகளும் உருவாகின்றன''.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''நல்லொழுக்க சக்திகளை பரந்ததாக்குங்கள். அனுதாபம், நேசம், கண்டும் காணாமை, கண்ணியம் ஆகியவற்றை பொதுவானதாக ஆக்கும்போதுதான் இது நிகழும். எல்லா தருணங்களிலும் கருணை மற்றும் திரையிட்டு மறைப்பதற்கு முன்னுரிமை வழங்குங்கள். குறிப்பாக தலைவர்கள் மற்றும் முரப்பிகளுக்கு இடையிலான உறவிலும் இது இருக்க வேண்டும். ஏனெனில் அவர்களின் மிகப்பெரும் பணிகளுள் ஒரு பெரிய பணி கருணை மற்றும் திரையிட்டு மறைத்தல் மற்றும் அனுதாபம் காட்டுவதாகும். இவை எல்லாவற்றையும் விட மேலோங்கி விட வேண்டும். கருணை உங்களுக்குள் எல்லாரையும் விட அதிகமாக இருக்க வேண்டும். மற்றவர் மீது அனுதாபம் உங்களிடம் அதிகமாக இருக்க வேண்டும். ஒருவர் மற்றவரின் குறையை மறைத்தல் உங்களிடம் அதிகமாக இருக்க வேண்டும். அற்ப விஷயங்களிலெல்லாம் கடுமையாக உள்ளம் வேதனையும், சஞ்சலமும் அடையத்தக்க முறையில் பிடிக்கக் கூடாது''. (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 347-348; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) இந்த விஷயங்களைக் கூறுவதற்கு, இறைவன் அவ்வாறு செய்யாமல் இருப்பானாக! ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் குறிப்பாக தலைவர்கள், அமீர்மார்கள் அல்லது முரப்பிகளுக்கு இடையில் ஜமாஅத்தில் பொதுவாகவே கருத்து வேறுபாடுகள்தான் காணப்படுகின்றன என்று பொருளல்ல. இறைவன் அவ்வாறு செய்யாமல் இருப்பானாக! ஒருபோதும் அப்படியல்ல. ஒருவேளை ஆங்காங்கே சில இடங்களில் அப்படி இருக்கலாம். எனக்கு வருடத்தில் ஓரிரு சம்பவங்களே தெரிய வருகின்றன. இவை அனைத்தையும் நான் பகிரங்கமாக கூறக் காரணம், சத்ர், அமீர் மற்றும் முரப்பிகளுக்கு அவர்களது பணி மிகவும் பரந்தது என்பது தெரிய வேண்டும்.

மேலும் மிக முக்கியமான நோக்கம் நம்முன் உள்ளது. அல்லாஹ் அவ்வாறு செய்யாமல் இருப்பானாக! ஒருவருக்கொருவர் முரண்பாடு உருவானால் அதனை உடனே தீர்த்து விடவும் வேண்டும். ஏனெனில் சில வேளையில் காணப்படுவது என்னவென்றால், ஒருவருக்கொருவர் உள்ள கருத்து வேறுபாடு அவர்களுக்குள்ளேயே இருப்பதில்லை. மாறாக, ஜமாஅத் மக்களிடம் அதன் பாதிப்பு ஏற்படுகிறது. நான் ஏற்கனவே கூறியதுபோன்று ஷய்த்தான் அதிலிருந்து அனுமதிக்கப்படாத பயனை அடைகிறான். எனவே, இரு தரப்பும் பெரிய நோக்கத்தை முன் நிறுத்த வேண்டும். ஜமாஅத்தின் அறிவு மற்றும் ஆன்மீக, நிர்வாகப் பயிற்சியின் பொறுப்பு அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை இரு தரப்பினரும் இணைந்துதான் நிறைவேற்ற வேண்டியதுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், சரியான விளைவு எப்போது ஏற்படும் என்றால் ஒருவருக்கொருவர் கலந்து உறவாடி பணி செய்யும்போதுதான் ஏற்படும் என்று மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: எந்த வேலையை இரு கைகளும் இணைந்து செய்ய வேண்டுமோ அந்த வேலையை ஒரு கையால் மட்டும் செய்து முடிக்க இயலாது. எந்த வழியை இரு கால்களால் நடந்து கடக்க முடியுமோ அதனை ஒரே காலால் கடக்க இயலாது. அதேபோன்று எல்லா வெற்றிகளும், சமுதாயத்தில் நமது நடைமுறை எல்லாமே பரஸ்பர ஒத்துழைப்பையே சார்ந்து நிற்கிறது. ஒரு தனி மனிதன் எந்தவொரு மார்க்க அல்லது உலகியல் பணியையாவது முடிக்க முடியுமா? ஒருபோதும் முடியாது. எந்த வேலையாக இருப்பினும் மார்க்கம் சார்ந்ததாயினும், உலகம் சார்ந்ததாயின் பரஸ்பர ஒத்துழைப்பு இன்றி நடக்கவே முடியாது. (பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 59)

பிறகு அன்னார் இதனையும் கூறியுள்ளார்கள்: ''குறிப்பாக பெரு மகத்தான இலட்சியத்தை உடைய ஒரு பணிக்கு பரஸ்பர ஒத்துழைப்பு இன்றியமையாத –தாகும்''. (பராஹீனே அஹ்மதிய்யா. ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 59) சத்ர் அல்லது அமீர் எல்லா உரிமைகளையும் தமது கையில் வைத்துக் கொண்டு தமது விருப்பத்திற்கேற்ப கொண்டு செல்ல விரும்புவதும் கூடாது அல்லது முரப்பிகளும் கூட தமது கருத்தையே சரி என்று புரிந்து கொண்டு அதனையே செயல்படுத்த வைக்க முயற்சி செய்யக் கூடாது. மாறாக, ஒத்துழைப்புடன் பணி செய்யுங்கள். ஜமாஅத்தின் தர்பிய்யத் முரப்பிகளின் பொறுப்பில் உள்ளது. நான் ஏற்கனவே கூறியதுபோன்று அவருக்கு மார்க்க அறிவும் அதிகமாக உள்ளது அல்லது பொதுவாகவே அதிகமாக உள்ளது அல்லது இருக்கவும் வேண்டும். அவர்கள் மார்க்க அறிவை கற்பிக்கவும் வேண்டும். ஆன்மீகத்தை மேம்படுத்த முயற்சி செய்யவும் வேண்டும். எனவே, அவருடைய தக்வாவின் தரம் மற்ற பொதுமக்களை விட அதிகமாக இருக்க வேண்டும். இதனை முரப்பிமார்கள் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்பட்டால் பொறுப்பாளர்கள் மற்றும் ஜமாஅத் மக்களுக்கிடையில் தன்னாலேயே முரப்பிகளுக்கு ஓர் அந்தஸ்து உருவாகி விடும். ஜமாஅத்தின் சத்ர் அல்லது அமீர் நினைவில் கொள்ள வேண்டும். நிர்வாகத் தலைவராக இருப்பதனால் ஜமாஅத்தின் நிர்வாக அமைப்பை சரியான முறையில் கொண்டு செல்லும் பொறுப்பு அவருக்கு இருக்கிறது. காலத்தின் கலீஃபா அந்த பணியில் அவரை தன்னுடைய பிரிதிநிதியாக்கி உள்ளார்கள். அதேபோன்று ஜமாஅத்தின் மார்க்க மற்றும் ஆன்மீக மேம்பாடு, முன்னேற்றம் இவற்றிற்குத் தேவையான வழிமுறைகளைப் பயன்படுத்தும் பொறுப்பு முரப்பிகளுக்கு உள்ளது. அவர்கள் இந்த விஷயத்தில் காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதி ஆவார்கள். ஆகவே, சத்ர்மார்கள், அமீர்மார்கள் மற்றும் முரப்பிமார்கள் ஆகிய இரு சாரரும் பரஸ்பரம் ஒத்துழைப்பு நல்க வேண்டும். ஒரு திட்டத்துடன் பணி செய்ய வேண்டும். அப்போதுதான் ஜமாஅத்தை நிர்வாகத்தின் அடிப்படையில் உறுதியாக்க முடியும். ஆன்மீக மற்றும் அறிவின் தரத்தையும் கூட முன்னேற்றிச் செல்ல முடியும்.

முதலிலும் கூட சுருக்கமாக நான் கூறி வந்தேன். மீண்டும் கூறுகிறேன். ஜமாஅத் தலைவர், அமீர் மற்றும் பிற பொறுப்பாளர்களின் பணி இன்னும் சொல்வதென்றால் அவர்களது பொறுப்பு என்ன –வென்றால், முபல்லிக்மார்கள் மட்டுமல்ல; வாழ்வை அர்ப்பணித்தவர்கள் எத்தனை பேர் உள்ளனரோ அவர்கள் அனைவர் மீதும் மதிப்பு மரியாதையை உங்கள் உள்ளத்திலும் உருவாக்குங்கள். ஜமாஅத் மக்களின் உள்ளத்திலும் உருவாக்குங்கள். அவர்களை கண்ணியப்படுத்துவதும், கண்ணியப்படுத்த வைப்பதும் உங்கள் பணியாகும். அதன் மூலமே முரப்பி, முபல்லிக், வாழ்வை அர்ப்பணித்தோர் ஆகியோர்களின் முக்கியத்துவம் தெளிவாகும். அதிகமாக இளைஞர்கள் அதிகமான ஜமாஅத் பணிகளில் தம்மை அர்ப்பணிப்பார்கள். நிச்சயமாக மார்க்கப் பணிக்காக தம்மை அர்ப்பணிப்பதும், முரப்பி முபல்லிக் ஆவதும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்கேயாகும். ஆனால் இந்தப் புரிதிறன் படிப்படியாகவே அதிகமாகிறது. வக்ஃபே நவ் இளைஞர்கள் முழுமையான முறையில் தம்மை இந்த தொண்டிற்காக அர்ப்பணிப்பதற்கு வெளிப்படையான தூண்டுதலும் தேவையாகும். அதன் மூலம் அவர்களின் ஆர்வம் அதிகமாக வேண்டும். இது மனித இயல்பாகும். அதனை மறுக்க முடியாது. முதலில் ஒரு தூண்டுதல் இருக்க வேண்டும். பிறகு ஜமாஅத்திற்கு தொண்டு புரியும் திறன் உருவாகி விட்டால் அல்லாஹ்வுக்காக எல்லாப் பணிகளையும் செய்ய வேண்டும் என்பது புரிந்து விட்டால் பிறகு வக்ஃபுடன் ஆன்மீக முன்னேற்றமும் ஏற்படும். பிறகு வாழ்வை அர்ப்பணித்த ஒருவர் உலகியல்வாதியின் நடைமுறையைப் பார்க்க மாட்டார். பார்க்கவும் கூடாது. இதுவே ஓர் உண்மையான அர்ப்பணிப்பின் உயிர் ஆகும்.

ஆகவே தலைவர்கள், அமீர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் ஆகியோர் முரப்பிகள் மற்றும் வாழ்வை அர்ப்பணித்தவர்களுடன் மிகவும் பணிவுடன் ஒத்துழைப்பும் கொண்ட உணர்வை அதிகமாக்க வேண்டும். அதன் மூலமே வருங்காலங்களில் முரப்பிகள் கிடைப்பது எளிதாகும். நான் கூறியது போன்று மிகப்பெரும் எண்ணிக்கையில் முரப்பிகள் தேவையாகும். இளைஞர்களின் உள்ளத்தில் அதிகமாக முரப்பி மற்றும் முபல்லிக் மற்றும் வாழ்வை அர்ப்பணிக்க தூண்டுதல் உருவாக வேண்டும்.

வாழ்வை அர்ப்பணித்த இளைஞர்களிடம், செயற்களத்தில் உள்ள இளைஞர்களான முரப்பிகளிடம் நான் கூற விரும்புகிறேன். உலகம் உங்கள் அந்தஸ்தை புரிந்தாலும் சரி, புரியா விட்டாலும் சரி. ஒரு சத்ர் அல்லது அமீர் அல்லது பொறுப்பாளர் அல்லது எந்தவொரு ஜமாஅத் நபராகவே இருப்பினும் அவர்கள்


## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**

ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.

Ph : +91 98409 17179

**O.A.N. DOORS & STEELS**

**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**

*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*

Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005

O.A. NIJAM - 99947 571772

V.A. SAIT - 99430 30230

## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**

வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

உங்களை கண்ணியப்படுத்தினாலும், கண்ணியப் –படுத்தா விட்டாலும் நீங்கள் அல்லாஹ்விடம் தியாகம் செய்வதாக வாக்களித்துள்ளீர்கள். அதனை நல்ல நிய்யத்துடன் நிறைவேற்றி வாருங்கள். உங்களின் பார்வை இவ்வாறு இருக்க வேண்டும். அதாவது, என் பெற்றோர், என்னை நான் பிறக்கும் முன்பே வக்ஃப் செய்து விட்டார்கள். பிறகு இளமையில் அடியெடுத்து வைக்கும்போது நான் என்னை வக்ஃப் செய்தேன். அதனை புதுப்பித்தேன். எனவே நான் உலகின் பக்கம் பார்க்கக் கூடாது. மாறாக, இறைவன் பக்கம் பார்க்க வேண்டும். இறை ஜமாஅத்தின் தேவையைப் பார்க்க வேண்டும். எனவே நான் ஜாமிஆவில் சேர்வதற்காக என்னை அர்ப்பணிக்கப் போகிறேன். முரப்பியான பிறகு எல்லா விஷயத்திலும் இறைவன் முன்னிலையில் மட்டுமே குனிய வேண்டும். மக்கள் நடந்து கொள்ளும் விதத்தை பொருட்படுத்தக் கூடாது. அதாவது மனிதன் எப்போதும் இறைவன் முன்தான் குனிய வேண்டும். இங்கு பொருள் என்னவெனில், பொறுப்பாளர் என்ன சொல்கிறார்? என்று பார்க்கக் கூடாது. முறையீடு ஏதாவது உங்களுக்கு இருக்கும் என்றால் கூட மனிதர்களிடம் வெளிப்படுத்துவதற்குப் பதில் இறைவன் முன் வெளிப்படுத்த வேண்டும். மக்களின் நடந்து கொள்வதைக் குறித்து பொருட்படுத்த வேண்டாம். வாழ்வை அர்ப்பணித்த ஒருவர் வாழ்நாள் முழுவதும் இறைவன் முன் வாழ்வை வைத்து விட்டார். மார்க்கத்திற்காக பணி செய்வதற்காக தம்மை அர்ப்பணித்து விட்டார்.

ஒரு பொறுப்பாளர் சில வருடங்களுக்கு தற்காலிகமாக பொறுப்பாளராக ஆக்கப்படுகிறார். அவர் ஜமாஅத்தை பொருத்த அளவில் பயனுள்ள அங்கமாக இல்லையென்றால், ஒத்துழைப்புக்குப் பதில் பிரச்சனைகளை ஏற்படுத்துகிறார் என்றால் அந்தப் பொறுப்பாளர் குறித்து முரப்பி இறைவனிடம் துஆ செய்ய வேண்டும். அது அவரது பொறுப்பாகும். பொறுப்பாளர் நேர்வழியில் நடக்கவில்லை என்றால் அல்லாஹ் அவரை விடுவிக்கட்டும் என்று துஆ செய்யுங்கள். அல்லாஹ் மறைவானதை அறிந்தவனும் எல்லா ஆற்றல்களுக்கும் உரிமையாளனும் ஆவான். அவனது பார்வையில் பொறுப்பாளரை பொறுப்பில் இருந்து அகற்றுவது நல்லது என்றால் அதனை செய்வான். அல்லாஹ்வின் பார்வையில் ஒரு பொறுப்பாளரின் வேறு சில நற்பண்புகளின் காரணமாக அவர் சேவையில் இருப்பதுதான் சிறந்ததாக இருக்கும் என்றால் உங்கள் துஆவை ஏற்றுக் கொண்டவாறு பிரச்சனைகளை உருவாக்குகிற அவரது பலவீனங்களை அகற்றி அவரை சீர்படுத்தி விடுவான். இது அல்லாஹ்வின் பணியாகும். முரப்பி எல்லா இடத்திலும் ஒத்துழைப்பு தான் வழங்க வேண்டும்; துஆ செய்ய வேண்டும்.

அதேபோன்று நான் முரப்பிகள் மற்றும் பொறுப்பாளர்கள் இரு சாராருக்கும் கூறிக் கொள்கிறேன். நாம் பொறுப்பாளர்களைப் பற்றி ஜமாஅத் மக்களின் வீடுகளில் தவறாகப் பேசப்படக் கூடாது என்று எதிர்பார்க்கிற அதே வேளையில் சத்ர்மார்கள், அமீர்மார்கள், பொறுப்பாளர்கள், முரப்பிமார்கள் ஆகியோரும் கூட எப்போதும் இதனை பேணி வர வேண்டும். அவர்களின் வீடுகளிலும் கூட மற்றவர்களைப் பற்றி எந்த வகையான எதிர்மறையான பேச்சுகளும் நடக்கக் கூடாது. ஆயினும், நல்ல அம்சங்களைக் கண்டிப்பாகப் பேசலாம். அதன் மூலம் முரப்பிமார்களின் சந்ததிகளும், பொறுப்பாளர்களின் சந்ததிகளும், ஜமாஅத் அமைப்பு மற்றும் வாழ்வை அர்ப்பணித்தவர் மீது எந்த நிலையிலும் மரியாதையை உருவாக்குவர். பொறுப்பாளர்களுள் குறிப்பாக ஜமாஅத் தலைவர்களும், அமீர்மார்களும் இதனையும் நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் எப்போதும் ஜமாஅத் மக்களுக்காக அன்பு நேசத்தின் சிறகுகளை விரித்து வைக்க வேண்டும். எந்தவொரு பதவியாவது உங்களுக்கு கிடைத்தால் அது உங்களுடைய உரிமைக்குரியதாக இருந்ததில்லை. இருக்கவும் இல்லை. அது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளாகும்.

ஆகவே அல்லாஹ்வின் இந்த அருளுக்கு மிகவும் பணிவுடன் மதிப்பு கொடுங்கள். காலத்தின் கலீஃபா உங்களிடம் வைத்துள்ள நம்பிக்கையை – அதாவது அவர் நம்பிக்கை வைத்தவாறு தமது அன்பிற்குரிய ஜமாஅத்தின் கண்காணிக்கும் பணியை உங்களிடம் ஒப்படைத்துள்ளார். அதன் உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள். சத்ர் மற்றும் பொறுப்பாளர்கள் தமது ஜமாஅத்தின் ஒவ்வொரு தனி மனிதரிடமும் பெரியவர்களிடமும் சிறியவர்களிடமும் இந்த உணர்வை உருவாக்குங்கள். தாம் ஒரு பாதுகாப்பான இறக்கையின் கீழ் உள்ளோம். எவ்வாறு ஒரு பறவை தனது குஞ்சை தனது இறக்கையில் வைத்துள்ளதோ அதுபோன்று எப்போதும் ஒவ்வொருவருடனும் மென்மையுடன் புன்னகைத்தவாறு பேசுங்கள். அலுவலகத்தின் நாற்காலி உங்களிடம் அகம்பாவத்திற்குப் பதில் அடக்கத்தை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு பொறுப்பாளருடைய வாசலும் முரப்பியின் வாசலும் ஒவ்வொருவருக்காகவும் திறந்திருக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியைக் கண் முன் நிறுத்த வேண்டும். அறிவிப்பில் வருகிறது. அன்னார் எப்போதும் புன்னகைத்தவாறு பிறரைச் சந்திப்பார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் அதப் பாபுத் தபஸ்ஸமி வஸ்ஸஹகி ஹதீஸ் 6089) அதேபோன்று சிலரது புகார் இவ்வாறு உள்ளது. எங்களது விவகாரம் ஜமாஅத்திடம் வந்தால் மாதக்கணக்கில் என்ன ஆனதென்று தெரிவதில்லை. ஆனால் நான் கடந்த வருடமும் பலமுறை நினைவூட்டியுள்ளேன். குத்பாவிலும் கூறியுள்ளேன். விவகாரங்களை முடிவுக்கு கொண்டு வருவதை விரைவாக செய்யுங்கள். காலதாமதம் செய்யாதீர்கள். இரண்டாவது, நிர்ப்பந்தமான சூழ்நிலையில் ஒரு விவகாரம் நீண்டு கொண்டு போகிறது என்றால், சில அனுமதிக்கப்பட்ட காரணங்களால் அவ்வாறு ஆகிறது என்றால், அவசியமான ஆய்வுகள் முழுமை பெறாமல் இருக்கிறது என்றால் பிறகு பாதிக்கப்பட்டவர் அல்லது முறையீடு செய்பவருக்கு மற்றும் இரு தரப்பிற்கும் தாமதமாகும் என்பதை தெரியப்படுத்தி விடுங்கள். எவ்வாறிருப்பினும் அவர்கள் கடிதம் வந்து கிடைத்ததை தெரிவித்து விட வேண்டும். Acknowledge செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டவருக்கு பதில் கூறி சமாதானப்படுத்தி பொறுப்பாளர் குறிப்பாக சத்ர் மற்றும் அமீர்மார்கள் சிரித்த முகத்துடன் அவரை சந்தித்தாலே பாதிக்கப்பட்டவரின் பாதி வருத்தம் போய் விடுகிறது. பிரச்சனை தீர்ந்து விடுகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு சின்னச்சின்ன விஷயத்தையும் புரிய வைத்துள் –ளார்கள். நமது நல்லொழுக்கம் எவ்வாறிருக்க வேண்டும்? என்று புரிய வைத்துள்ளார்கள். அதன்படி செயல்படுங்கள். சத்ர்மார்கள், அமீர்மார்கள், பொறுப்பாளர்கள் பற்றி மக்களிடமிருந்து வரக்கூடிய புகார்களான இவர்களது நடைமுறை எங்களுக்கு நிம்மதிக் குலைவை உருவாக்குகிறது என்பது அகன்று விடும். அந்த புகார் வராது. மற்றவருடன் இன்முகத்துடன் பழகுதல் பற்றி ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சாதாரண நன்மையைக் கூட இழிவாகக் கருதாதீர்கள். தமது சகோதரரை மலர்ந்த முகத்துடன் சந்திப்பதாக இருந்தாலும் சரியே. (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா வல் ஆதாப். பாபு இஸ்திஜாபு தலாத்ததில் வஜ்ஹி இன்தல்லிகா ஹதீஸ் 2626) அல்லாஹ் ஒவ்வொரு செயலுக்கும் நற்கூலி வழங்குகிறான். இனிமையாகப் பழகுவதும் கூட மனிதனது நன்மையில் அதிகரிப்பு ஏற்படக் காரணமாக அமைகிறது. ஆகவே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியிலும் தமது தராசின் நன்மையின் தட்டைக் கனமாக்க முயற்சி செய்ய வேண்டும். பொறுப்பாளர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஜமாஅத்தின் எந்த பொறுப்பும் எந்த வகையிலும் பெருமைப்படுத்துவதற்காக தரப்படவில்லை. மாறாக, பணிவை வளர்ப்பதற்காகவே தரப்பட்டுள்ளது. ஆகவே ஒவ்வொரு முடிவு மற்றும் ஒவ்வொரு பணியையும் அல்லாஹ்வின் அச்சத்தை உள்ளத்தில் கொண்டவாறு மிகவும் பணிவுடன் நேர்மையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியவாறு செய்ய முயற்சிக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆட்சி அதிகாரம் தரப்பட்டவர்களுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளார்கள். ஒவ்வொரு பொறுப்பாளரும் அதனை முன்னிறுத்த வேண்டும். நிச்சயமாக தமது பணியின் தரமும் நீதியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதும் பன்மடங்கு அதிகமாகி விடும்.

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவரை அல்லாஹ் மக்களின் பொறுப்பாளராக்கினானோ அவர் கண்காணிப்பு மற்றும் தமது கடமையை நிறைவேற்றுதல் மற்றும் அவர்களின் நலம் நாடுதலில் தவறிழைத்தால் அவர் மரணித்த பிறகு அவருக்கு அவன் சொர்க்கத்தை ஹராமாக்கி விடுவான். (சஹீஹ் புகாரி கிதாபுல் அ.ஃ.காம் பாபு மனிஸ்தர்யி ரயிய்யதி .ஃ.பலம் யஸஹ் ஹதீஸ் 7151)

பாருங்கள்! இது எவ்வளவு கடுமையான எச்சரிக்கை! மனிதனை உலுக்கி விடக்கூடியது. மேலும் அல்லாஹ் மற்றும் மறுமை மீது நிச்சய உறுதி இருந்தால் ஒவ்வொரு பொறுப்பாளரும் ஒவ்வொரு பணியையும் அச்சத்துடன் செய்ய வேண்டும்.

ஓரிடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கியாமத் நாளில் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவர்களும் அதிக நெருக்கமானவர்களும் நீதிமானாக இருந்த அரசர்களாக இருப்பர். அவனது கடுமையான திருப்தியின்மையைப் பெற்றவரும் அவனை விட்டு தூரத்தில் இருப்பவரும் அநீதியிழைத்த அரசராகவே இருப்பார். (சுனன் திர்மிதி அப்வாபுல் அஹ்காம் பாபு மாஜாஅ .ஃ.பீ இமாமுல் ஆதிலி ஹதீஸ் 1329)

ஆகவே, நமது பொறுப்பை மிகவும் நுட்பமான பார்வையுடன் மேற்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நீதியின் எதிர்பார்ப்பு நிறைவேறும். அதுபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதுவும் கூறியுள்ளார்கள். எவர் தேவை உடையோர், ஆதரவற்றோர், ஏழைகள் ஆகியோருக்காக தமது கதவை அடைத்து வைத்துக் கொள்வாரோ அவருக்காக அல்லாஹ்வும் அவரது தேவைக்காக வானத்தின் கதவை அடைத்து விடுவான். (சுனன் திர்மிதி அப்வாபுல் அஹ்காம் பாபு மாஜாஅ .ஃ.பீ இமாமுர் ரயிய்யதி ஹதீஸ் 1332) பொறுப்பாளர்கள் மற்றும் அமீர் முதல் ஒரு சிறு பகுதியின் பொறுப்பாளர் வரை ஒவ்வொருவரின் பணி என்னவென்றால், காலத்தின் கலீஃபாவை சுற்றி வருகிற ஜமாஅத் அமைப்பில் பொறுப்பாளர் என்பவர் அவரது பிரதிநிதியாக எல்லா இடத்திலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தமது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதே ஆகும். இறைவனிடம் எப்போதும் அவனது அருளை கேட்க வேண்டும். அதுபோன்று கிளை அமைப்பின் பொறுப்பாளர்களும் தமது பொறுப்பை உணர

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

**புன்னகையுடன் உங்களது பணிகளை நிறைவேற்றுங்கள். எந்தவொரு விருந்தினரிடமும் எவ்வகையிலான தீய ஒழுக்கத்துடனும் நடந்து கொள்ளாதீர்கள். புதிதாக வருகின்ற பணியாளர்களிடமும் நான் கூறுகின்றேன். மாநாட்டில் எங்கு உங்களுக்கு டியூட்டி இருந்தாலும் நீங்கள் ஒவ்வொருவருடனும் நல்லொழுக்கத்துடன் நடந்து கொண்டவாறு நல்ல முறையில் அவர்களை சந்திக்க வேண்டும்.**

**உயர்வான நல்லொழுக்கத்தில் எல்லாவற்றையும் விட மிகப்பெரும் விஷயம் இதுவாகும். அதாவது மிகவும் மோசமான நிலைமைகளில் கூட புன்சிரிப்புடன் உங்களது பணிகளை நிறைவேற்றுங்கள். எந்தவொரு விருந்தினரிடமும் எவ்வகையிலான தீய ஒழுக்கத்துடனும் நடந்து கொள்ளாதீர்கள்.**

# 6 அக்டோபர் 2016 -ல் நடைபெற்ற கனடாவின் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் பணியாளர்களிடம் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஆற்றிய உரை

தஷஹ்ஹுத், தஅவ்வுஸ் மற்றும் பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம் ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டு வெகுகாலம் கழிந்துவிட்ட உலகில் உள்ள அத்தகைய எல்லா நாடுகளிலும் மாநாடுகள் நடக்கின்றன. மாநாட்டின் ஏற்பாடுகளுக்காக டியூட்டி கொடுக்கின்ற பணியாளர்களும் கூட கிடைக்கின்றனர். அல்லாஹ்வின் அருளால் ஒரு நீண்ட காலக்கட்டமாக மாநாடுகள் நடைபெற்று வருகின்ற அந்த எல்லா ஜமாஅத்களிலும் அங்குள்ள பணியாளர்களும் கூட தங்களது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் நன்கு பயிற்சி பெற்றுள்ளனர். அதில் நல்ல அனுபவம் அவர்களுக்கு கிடைத்துள்ளது.

பல்வேறு மாநாடுகள் நடைபெறும் சந்தர்ப்பத்தில் குறிப்பாக யூகே வில் அல்லது சுயமே நான் கலந்து கொள்ளும் சில இடங்களில் பணியாளர்களுக்கு நான் சில விஷயங்களை கூறுகின்றேன். மேலும் அல்லாஹ்வின் அருளால் முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா (எம்.டி.ஏ) மூலமாக எல்லா இடங்களிலும் இந்த தூதுச் செய்தியும் கூட சென்று சேர்கிறது. எனவே அறிவுரை செய்வதை பொருத்தவரையில் பணியாளர்களாகிய நீங்கள் எல்லாரும் பணியாற்றுகின்ற அனைவரும் எம்.டி.ஏ வுடன் ஒன்றியே இருந்து வருகின்றனர். அதை கேட்பவர்களாக இருக்கின்றனர். எனவே, ஒவ்வொருவருக்கும் அவர்களது பொறுப்புகள் என்ன? என்பதை நினைவூட்டுகின்ற வகையில் அதை பற்றி எடுத்து கூறுவதும் அல்லது அது பற்றி கவனமூட்டவதும் கூட அல்லாஹ்வின் கட்டளையின் அடிப்படையிலேயாகும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: மாநாடு தொடர்பாக நீங்கள் அனைவரும் இந்த விஷயத்தை நினைவில் வைக்க வேண்டும். எந்த ஒரு தொண்டிற்காகவும் நீங்கள் உங்களை அர்ப்பணித்திருந்தாலும் அதில் எந்தவொரு பலவந்தமும் இல்லை. மாறாக, ஓர் ஆர்வத்துடன் சுயமே உங்களை நீங்களே அர்பணித்துள்ளீர்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்-பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்-களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பதற்காகவே உங்களை நீங்கள் அர்ப்பணித்துள்ளீர்கள். மனிதனுக்கு சொந்தமான வீட்டில் விருந்தாளி வருகின்றனர். அவருக்காக அவரால் என்ன செய்ய முடியுமோ அதை அவர் செய்கின்றார். அவ்வாறிருக்க மார்க்கத்திற்காக பயணம் செய்து வருகின்ற அந்த விருந்தினார்-களுக்காக அதை அவர் செய்கின்றார் என்றால், எந்த அளவு தொண்டுணர்வுடனும் எழுச்சியுடனும் ஆர்வத்துடனும் இந்த தொண்டை அவர்கள் செய்ய வேண்டும் என்பதை சுயமே அவர்களே கணித்து கொள்ளட்டும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்:

அமைப்பு ரீதியான விவகாரங்களை பொருத்தவரையில் பல வருடங்களுக்கு பிறகு இங்கு மாநாட்டிற்கு நான் வந்திருந்தாலும் எனது எண்ணத்திற்கு ஏற்ப ஆண்டு மாநாட்டில் தொண்டு புரிகின்ற கனடா ஜமாஅத்தின் பணியாளர்கள் எந்த அளவு தனது பணிகளில் திறமை பெற்றவர்களாக ஆகி விட்டனர் என்றால் அவர்கள் ஒவ்வொரு பணியையும் மிகவும் நுட்பமாக புரிந்து கொண்டு செயல்படுபவர்களாக இருப்பார்கள் என்று நான் கருதுகின்றேன் - இன்ஷா அல்லாஹ். நான் அவர்களிடம் இந்த நம்பிக்கையைதான் வைத்துள்ளேன். ஆனால், சில தருணங்களில் புதிதாக வருகின்ற சிலரும் பணியாளர்களாக இருக்கின்றனர். இப்போதும் மிகவும் அதிகமானோர் கடந்த சில வருடங்களில் பாகிஸ்தானிலிருந்து வருகின்ற ஜமாஅத் சகோதரர்கள் தொடர்பாக அதிலும் குறிப்பாக ரப்வாவில் வசித்து வந்த ஜமாஅத் சகோதரர்கள் தொடர்பாக அவர்கள் மாநாட்டு பணிகளை செய்வதில் மிகவும் திறமை பெற்றவர்கள் என்று கருதப்பட்டனர். ஆனால், 1984 லிருந்து இதுவரை ஏறக்குறைய 33 அல்லது 34 வருடங்களாக பாகிஸ்தானில் மாநாடுகள் நடக்கவில்லை. அப்போது பணியாற்றுபவர்களாக இருந்து வந்த ஒரு தலைமுறையை சார்ந்தவர்கள் இப்போது முதியவர்களாக ஆகிவிட்டனர். மேலும் அதிக வயதுடைய பெரியவர்கள் ஒருவேளை இவ்வுலகை விட்டே பிரிந்து சென்றிருப்பார்கள். அப்போது சிறுவர்களாக இருந்தவர்கள் இப்போது இளைஞர்களாகி விட்டனர். இன்னும் சொல்வதென்றால் அன்ஸாருல்லாஹ்வின் வயதை அடையக் கூடியவர்களாக அவர் இருக்கின்றனர். எனவே, அவர்களுக்கு இவ்விஷயத்தில் எந்த அனுபவமும் இல்லை. எனவே பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்திருப்பவர்கள் ரப்வாவிலிருந்து வந்திருந்தாலும் கூட அவர்களுக்கும் கூட மேலும் அனுபவம் தேவைப்படுகின்றது. ரப்வாவில் ஒவ்வொரு வருடமும் அல்லது ஒரு வருடத்தில் பல முறை அவர்களுக்கு டியூட்டிகள் தரப்படுகின்றன. அந்த பணியாளர்களுக்கு குறிப்பாக லங்கர் கானாவை (உணவகத்தை) நடத்துவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. எப்போது அல்லாஹ் அங்கு நிலைமைகளை சிறந்ததாக ஆக்கினாலும் உடனடியாக பணிகளை பொறுப்பேற்று சரியான முறையில் செய்யும் வகையில் அவர்களுக்கு அதற்கான பயிற்சி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், எந்நிலையிலும் பயிற்சிக்கான ஒரு காலக்கட்டத்தை கடந்து செல்வது, அனுபவ ரீதியாக ஒரு பணியை செய்து முடிப்பது, உண்மையில் விருந்தினர்களை தனக்கு முன்னால் வைத்துக்கொண்டு அவர்களுக்கு தொண்டு செய்வது என்பவை முற்றிலும் வேறுபட்ட ஒரு விஷயமாகும்.

எனவே, புதிதாக வந்துள்ள பணியாளர்களிடம் நான் இதை கூறிக் கொள்கின்றேன். சில சிறுவர்கள் இளைஞர்களாகி இப்போது பணியாளர்களாக ஆகியுள்ளனர். சிலர் புதிதாக வருபவர்களாக இருக்கின்றனர். பணியாளர்களாக தமது பணியை அவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர். மாநாட்டில் உங்களுக்கு எங்கு டியூட்டி இருந்தாலும் ஒவ்வொருவருடனும் எந்த முதல் விஷயத்தை உங்கள் கண்முன் நிறுத்தி நீங்கள் செயல்பட வேண்டும் என்றால் அது உங்களது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தியவாறு நல்ல முறையில் நீங்கள் ஒருவரை சந்திக்க வேண்டும் என்பதாகும். எந்த ஒரு டியூட்டியில் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தாலும் அவர் சில துன்பங்களை சந்திக்க வேண்டியது வராது என்பது ஒரு போதும் கண்டிப்பான ஒன்றல்ல. சிலர் தெரிந்துகொண்டே சண்டையிடுவதற்கு முயற்சி செய்கின்ற மக்களாக இருக்கின்றனர். சிலர் பணியில் இருப்பவர்களுக்கு கோபமூட்டுவதற்கு முயற்சி செய்வார்கள். சில நிலைமைகள் எவ்வாறு நமக்கு முன்னால் வருகின்றன என்றால் அத்தகைய தருணங்களில் மனிதன் கோபப்பட்டு விடுகின்றான். ஆனால் ஒரு அஹ்மதி பணியாளர் தனது உயர்வான நல்லொழுக்கம் எப்போதும் நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஒருவரது எந்த ஒரு செயலும் அவரது உயர்வான நல்லொழுக்கத்தை பறிக்க முடியாமல் இருக்க வேண்டும். உயர்வான நல்லொழுக்கத்தில் எல்லாவற்றையும் விட மிகப்பெரிய விஷயம் இதுவேயாகும். அதாவது எப்போதும் புன்சிரிப்புடன் இருக்க வேண்டும். மிகவும் மோசமான நிலைமைகளில் கூட புன்சிரிப்புடன் தமது பணிகளை நிறைவேற்ற வேண்டும். எந்த ஒரு விருந்தினரிடமும் எவ்வகையிலான தீய ஒழுக்கத்துடனும் நடந்து கொள்ளக்கூடாது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எனினும் ஒத்துழைப்பு தருபவர்கள் மற்றும் பணியில் இருப்பவர்கள் தங்களது மேலதிகாரிகள்வரை உங்களுடன் தீய முறையில் நடந்து கொள்பவரை பற்றிய புகாரை எட்ட வைக்கலாம். அதிகாரிகள் தங்களது அமீரிடம் அதை பற்றி கூறலாம். இந்த மக்கள் இது போன்ற தீய ஒழுக்கத்துடன் நடந்து கொள்கின்றனர் என்பதை கூறலாம். அதன் மூலம் தர்ப்பியத்திற்கான மற்றும் விஷயத்தை புரிய வைப்பதற்கான அமைப்பு அவர்களது சீர்த்திருத்தத்திற்காக முயற்சி செய்ய முடியும். ஆனால், நேரடியாக எவ்வகையான சண்டையும் நிகழக்கூடாது. பணியில் இருப்பவர்கள் டிரா.்.பிக்கை கட்டுப்படுத்தக்கூடியவர்களாக இருந்தாலும் சரியே. இப்போது இங்கு கார்கள் அதிகமாகி விட்டன. அதன் காரணமாக இங்கு அதிகமான நெரிசல் இருக்கும். அத்தகைய தருணத்தில் டிரா.்.பிற்கு சரியான வழிகாட்டுதலை வழங்குவதும் அவர்களது இடத்திற்கு அவர்களை கொண்டு செல்வதும் மிகவும் கடினமான பணியாக இருக்கின்றது. இடமில்லையென்றாலும் சில மக்கள் வலுக்கட்டாயமாக தங்களது கார்களை உள்ளே கொண்டு வருவதற்கு முயற்சி செய்கின்றனர். அத்தகைய நிலைமைகளில் அவர்களுக்கு அன்புடன் புரிய வையுங்கள். நிதானமாக புரிய வையுங்கள். அதற்கு பிறகும் கூட ஒருவர் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிமுறையையும் சட்டத்தையும் மீறி நடக்கின்றார் என்றால் அவரை பற்றி உங்களது மேலதிகாரிகளுக்கு புகார் கூறுவதை மட்டும் நீங்கள் செய்ய வேண்டும். அதன் மூலமாக தர்பிய்யத்திற்கான அமைப்பு சுயமே அவர்களுக்கு புரிய வைப்பதற்கும் அவர்களை சீர்திருத்துவதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இவ்வாறே சாப்பிடும்போது சில மக்கள் தங்களது இயல்பிற்கேற்ப செயல்படுகின்றனர். சாப்பிடும் விஷயத்தில் பல தருணங்களில் அவர்கள் அடம்பிடிக்கின்றனர். ஆனால், எவர்கள் உணவுப் பரிமாறுகின்ற டியூட்டியில் இருக்கின்றனரோ அவர்கள் மக்கள் இவ்வாறு அடம்பிடித்தாலும் கூட அவற்றைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும். எவ்வாறு ஒரு தாய் தனது பிள்ளைகளுக்கு உணவூட்டுகின்றபோது அவர்களது பிடிவாதத்தை சகித்துக் கொள்கின்றாளோ அதுபோன்றே இவர்களுடனும் நடந்து கொள்ள வேண்டும். எவ்வகையிலும் தீய ஒழுக்கத்துடன் நடந்து கொள்ளக் கூடாது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் இவ்வாறு கூறினார்கள்: இவ்வாறே தூய்மையைக் கண்காணிக்கும் அமைப்பு இருக்கின்றது. தூய்மை மிகவும் முக்கியமான விஷயமாகும். மாநாட்டுத் திடலில் பணியில் இருப்பவர்களுக்கென்று துப்புறவுப் பணிக்காக ஓர் அமைப்பு இருக்கின்றது. Health and Sanitary (சுகாதாரம் மற்றும் உடல் ஆரோக்கியம்) துறை சார்ந்தவர்களுக்கென்று தூய்மையைக் கண்காணிக்கிற இன்னோர் அமைப்பு இருக்கின்றது. எனவே, ஒவ்வோர் அமைப்பிலும் தூய்மைக்கென்று ஓர் அமைப்பு இருக்கின்றது. எனவே, எந்தவொரு பணியையும் சாதாரண -மானதாகக் கருதிவிடக் கூடாது. மாறாக, தத்தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு அவர்கள் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். அதனை அழகிய நல்லொழுக்கத்துடன் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு ஒவ்வொரு பணியாளரும் இதையும் நினைவில் வைக்க வேண்டும். உலக நிலைமைகளைப் பார்க்கும்போது பாதுகாப்பை கண்காணிப்பது பாதுகாப்புப் பணியில் இருப்பவர்களின் பணி மட்டுமல்ல என்பதை நாம் புரிந்து செயல்பட வேண்டும். எனவே, ஒவ்வொரு பணியாளரும் தத்தமது பகுதிகளிலும், தான் இருக்கும் இடத்திலும் எங்கெல்லாம் அவருக்கு டியூட்டி இருக்கின்றதோ அங்கெல்லாம் மிக அதிகமான கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் வலப்பக்கமும் இடப்பக்கமும் தனது பார்வையை வைத்திருக்க வேண்டும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்: எல்லாவற்றிற்கும் மேலாக நமது பணி எப்போதும் துஆக்கள் மூலமாகவே நடக்கின்றது என்பதை இந்த நாட்களில் நினைவில் கொள்ளுங்கள். எனவே, எங்கு நீங்கள் டியூட்டி கொடுத்துக் கொண்டிருக்கின்றீர்களோ அங்கு துஆக்கள் செய்வதன் பக்கமும் குறிப்பாக நீங்கள் அழுத்தம் காட்டுங்கள். அவ்வாறே ஒவ்வொரு பணியாளரும் ஆண்டு மாநாட்டில் டியூட்டி கொடுப்பது என்பது இறைவணக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பகரமாக ஆகி விடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எங்கு தொழுகைகளுக்கான கட்டளையிடப்பட்டிருக்கின்றதோ அங்கு ஜமாஅத் ஆக தொழ வேண்டும் என்ற கட்டளையே உள்ளது. எனவே, அதை நிறைவேற்றுவது கண்டிப்பானதாகும். டியூட்டி கொடுக்கின்றபோது பள்ளிவாயிலிலும் அல்லது வேறு எந்த இடத்திலும் அல்லது மாநாட்டுத் திடலிலும் தொழுகைகளை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்க -வில்லையென்றால் ஒவ்வொரு பிரிவில் உள்ளவர்களும் தனியாக ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்ற வேண்டும். இதை முறையாகப் பேண வேண்டும். அதிகாரிகளும் நாஸிம்களும் தனக்குக் கீழ் பணிபுரிபவர்கள் இவற்றை முறையாக பேணி நடக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் இந்த மாநாட்டை எல்லா வகையிலும் மிகவும் அருளுக்குரியதாக ஆக்குவானாக! உங்களுக்கு அல்லாஹ் சிறந்த முறையில் தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக! துஆ செய்யுங்கள். இதற்குப் பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் துஆ செய்தார்கள்.

துஆவிற்குப் பிறகு பாங்கு கொடுக்கப்பட்டது. இப்போது தொழுகையை நிறைவேற்றுவதற்கு சிறிது நேரம் எஞ்சியிருந்தது. ஹுஸூர் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். இந்த தருணத்தில் ஹுஸூர் அவர்கள் பல்வேறு நாஸிம்களிடம் அவர்களது துறையின் பணிகளைப் பற்றி ஆய்வு செய்தார்கள்.

தங்குமிடத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யும் நாஸிமிடம் ஹுஸூர் அவர்கள் வருகின்ற விருந்தினர்களுக்காக அவர்கள் தங்குவதற்காக எங்கெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது? என்று கேட்டார்கள். அதற்கு நாஸிம் சாஹிப் அவர்கள் மதரஸத்துல் ஹி.்.ப்ஸிலும், ஆயிஷா அகாடமியிலும், விருந்தினர் இல்லங்களிலும், ஜாமிஆவின் விடுதியிலுள்ள ஒரு கட்டடத்திலும், Peace Village -ல் உள்ள பல்வேறு வீடுகளிலும் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்கள். மக்கள் தங்களது வீடுகளிலுள்ள பல்வேறு பகுதிகளை விருந்தினர்களுக்காக தந்துள்ளனர் என்றும் நாஸிம் சாஹிப் அவர்கள் கூறினார்கள். இப்போது அமெரிக்காவிலிருந்து மட்டும் ஏறக்குறைய 1500 விருந்தினர்கள் வந்து விட்டனர் என்ற தகவலையும் அவர்கள் கூறினார்கள். அதற்கு ஹுஸூர் அவர்கள் எல்லா விருந்தினார்களும் முறையாக பதிவு செய்யப் -பட்டிருக்கின்றார்களா? என்று வினவினார்கள். அதற்கு நாஸிம் சாஹிப் அவர்கள் எல்லா விருந்தினர்களும் பதிவு செய்யப்பட்டு வருகின்றனர் என்று கூறினார்கள். அப்போது ஹுஸூர் அவர்கள் அமெரிக்காவிலிருந்து வருபவர்கள் தங்களது AIMS கார்டைப் பயன்படுத்திக் கொள்வார்கள். இவ்வாறு மற்ற நாடுகளிலிருந்து வருபவர்களும் தங்களது கார்டைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறினார்கள்.

விருந்தோம்பல் துறையின் நாஸிம் சாஹிப் அவர்கள் ஹுஸூர் அவர்கள் கேட்ட ஒரு கேள்விக்கு எங்கெல்லாம் விருந்தினர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனரோ அங்கேயே அவர்களது உணவிற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கின்றது என்று கூறினார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் மாநாட்டுத் திடலின் அதிகாரி இடம் மாநாட்டுத் திடலிலுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக கேட்டார்கள். மேலும் ஆண்களுக்கான மாநாட்டுத் திடலிலும், பெண்களுக்கான மாநாட்டுத் திடலிலும் கழிப்பிடங்களும், அவ்வப்போது உடனடியாக அவற்றை சுத்தம் செய்வதற்கான ஏற்பாடும் இருக்கின்றதா? என்று கேட்டார்கள்.

இதற்கு மாநாட்டுத் திடலின் அதிகாரி அவர்கள் முறையாக இரண்டு ஹால்களையும் ஒட்டி இருக்கின்ற பல்வேறு பகுதிகளில் கழிப்பிடங்கள் உள்ளன. ஆண்கள் பகுதியில் ஏறக்குறைய 80 கழிப்பிடங்கள் உள்ளன. அதே அளவு கழிப்பிடங்கள் பெண்கள் பகுதியிலும் இருக்கின்றன. அவற்றை சுத்தம் செய்வதற்கு சுத்தம் செய்யும் துறையில் உள்ள ஒரு குழு முறையாக தனது பணியைச் செய்து வருகின்றது என்று கூறினார்கள். அதற்கு ஹுஸூர் அவர்கள் சுத்தம் செய்வதற்கான நல்ல ஏற்பாடு இருக்க வேண்டும். உடனுக்குடன் இந்த பணி நடக்க வேண்டும் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் ஜாமிஆ மாணவர் -களில் யாரெல்லாம் இங்கு இருக்கின்றார்களோ அவர்கள் எழுந்து நில்லுங்கள் என்று கூறினார்கள். ஹுஸூர் அவர்கள் அந்த மாணவர்களிடம் உங்களுக்கு இரண்டு மூன்று இரவுகள் விழித்து இருக்கும் அனுபவம்

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 13 April 2017 Issue No. 15

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

இருக்கின்றதா? என்று கேட்டார்கள். பிறகு இந்த அனுபவம் உங்களுக்கு இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தனித்தனியாக ஒவ்வொரு மாணவரிடமும் அவர்கள் படிக்கின்ற வகுப்புகள் மற்றும் ஆண்டு மாநாட்டின்போது அவர்களது டியூட்டிகள் என்ன என்பதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

நான்கு அல்லது ஐந்து மாணவர்கள் எங்களுக்கு ஆண்டு மாநாட்டின் அதிகாரியின் அலுவலகத்தில் டியூட்டி தரப்பட்டிருக்கின்றது என்று கூறினர். அதற்கு ஹுஸுர் அவர்கள் இவ்வளவு அதிகமான மாணவர்களுக்கு அலுவலகத்தில் டியூட்டி கொடுத்துள்ளீர்கள். எங்கு கடுமையான பணிகள் உள்ளனவோ அத்தகைய இடங்களில் ஜாமிஆ மாணவர்களுக்கு டியூட்டி கொடுக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு ஆண்டு மாநாட்டின் அதிகாரி அவர்கள் இந்த எல்லா மாணவர்களிடம் இருந்து வேறு பல பணிகளையும் செய்ய வைக்க வேண்டியது இருக்கின்றது. இவர்களில் சிலர் லங்கர் கானாவிலும் (உணவகத்திலும்) பணி ஆற்றுவர் என்று கூறினார்கள்.

அதற்கு பிறகு ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இரவு 8.00 மணிக்கு மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளைச் சேர்த்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டார்கள்.

———

*(குத்பா தொடர்ச்சி…)*

வேண்டும். கிளை அமைப்பும் அன்ஸாரும், லஜ்னா, குத்தாம் ஆகியோர் எல்லா மட்டத்திலும் செயற்துடிப்புடன் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த அமைப்புகளை நிறுவியதன் நோக்கம் என்னவென்றால், ஜமாஅத்தின் ஒவ்வொரு மட்டமும் செயற்துடிப்புடன் இருக்க வேண்டும் என்பதாகும். பல்வேறு வழிமுறைகளின் மூலமாக ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு முயற்சி நடந்து கொண்டிருக்க வேண்டும். ஜமாஅத் மக்களின் ஒவ்வொரு மட்டத்திற்கும் பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், வயோதியர்கள் வரை நாம் சென்று சேர வேண்டும். அதன் மூலம் எல்லா தரப்பிலிருந்தும் காலத்தின் கலீஃபாவிற்கு செய்தி போய் சேர வேண்டும். ஜமாஅத்தின் நிலை என்னவென்று தெரிய வேண்டும்.

ஒவ்வொரு பொறுப்பாளரும் மார்க்கப் பணியை இறைவனது பேரருளாகக் கருதி செய்ய வேண்டும். ஒருவர் மற்றவருக்கு ஒத்துழைப்பும் நல்க வேண்டும். ஜமாஅத் அமைப்பு, தலைவர்கள், அமீர்மார்கள் மற்றும் கிளை அமைப்புகள் இவற்றுக்கிடையில் பரஸ்பரம் ஒத்துழைப்பு இருக்க வேண்டும். இந்தப் பரஸ்பர ஒத்துழைப்பும் இருந்தால் மேலும் எல்லா கிளை அமைப்பும், ஜமாஅத் அமைப்பும் செயற்துடிப்புடையதாகி விட்டால், பிறகு ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் வேகம் பன்மடங்கு அதிகமாகும். ஆகவே இதனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எந்தப் பொறுப்பாளருக்கு எதிராகவும் புகார் இருந்தால், புகார் வந்தால் அல்லது அவர் முன்பு அவருக்கு எதிராகப் பேசப்பட்டால் அதனை கேட்டுக் கொள்ளும் தைரியம் அவருக்கு இருக்க வேண்டும். எல்லாரையும் விட அதிகமாக சகிப்புத்தன்மை இருக்க வேண்டும். பேசுபவரைப் பழிவாங்குவதற்குப் பதிலாக முதலில் தம்மை சீர்படுத்த வேண்டும். என்னிடம் அந்த தவறு இருக்கிறதா? இல்லையா? என்று தன்னை முதலில் அவர் ஆய்வு செய்ய வேண்டும். இவர் சரியாகக் கூறுகிறாரா? தவறாகக் கூறுகிறாரா? என்று பார்க்க வேண்டும். மேலும் இதுவும் நீதியின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற அவசியமாகும்.

ஜமாஅத் மக்களிடம் நான் கூற விரும்புகிறேன். அவர்களும் தமது தக்வாவின் தரத்தை அதிகமாக்க வேண்டும். நன்மை மற்றும் தக்வாவில் ஒத்துழைக்குமாறு அவர்களுக்கும் கட்டளையிடப்பட்டுள்ளது. ஜமாஅத் மக்களின் தக்வா மற்றும் நன்மையின் தரம் அதிகமாக இருக்கும்போது பிறகு தானாகவே நன்மை மற்றும் தக்வா உடைய பொறுப்பாளர்கள் கிடைத்துக் கொண்டிருப்பர். ஆகவே, ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்வதும் அவசியமாகும். தமது நன்மை மற்றும் தக்வாவின் தரம் எவ்வாறுள்ளது? அதில் அவர் அதிகரிக்க முயற்சி செய்கிறரா? இல்லையா? ஒவ்வொரு ஜமாஅத் நபரும் தமது ஜமாஅத்தின் கடமையை நிறைவேற்ற வேண்டும். அது அவர் மீது கட்டுப்படுதல் என்ற முறையில் தரப்பட்டுள்ளது. நீங்கள் கட்டுப்படுங்கள் என்று ஜமாஅத் பொறுப்பு தந்துள்ளது. உங்களது கட்டுப்படுதலின் முன்மாதிரி உங்களை ஜமாஅத்தின் தொடர்பில் முன்னேற்றத்தைத் தரும் அதே வேளையில் அது உங்கள் சந்ததிகளையும் ஜமாஅத்துடன் இணைத்து வைக்கும். சந்ததிகளின் தக்வாவின் தரம் உயர்ந்து அது அதிகமாகும். பிறகு வருங்காலத் தலைமுறைகளிலும் தக்வாவின்படி நடப்பவர்கள் கிடைத்துக் கொண்டேயிருப்பார்கள். ஆகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்த வழிகாட்டலையும் உள்ளத்தில் நிலைநாட்டுங்கள். நாம் நமது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதை தமது சந்ததிகளின் உள்ளத்திலும் அமர்த்துங்கள். வறுமை, வசதி, மகிழ்ச்சி, மகிழ்ச்சியின்மை சுருக்கமாக எல்லா நிலையிலும் காலத்தின் ஆட்சியாளரின் கட்டளையைக் கேட்டு அதற்கு கட்டுப்பட வேண்டும். (ஸஹீஹ் புகாரி கிதாபுல் ஃபிதன் பாபு சதரவ்ன ப.ஃதீ உமூரில் முன்கரி வன்னஹா ஹதீஸ் 7056) ஜமாஅத்தில் எந்த உலகியல் ஆட்சியாளர் போன்று எவரும் இல்லை. ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்படுதலிலும் கூட இதே உணர்வு இருப்பது அவசியமாகும். நமக்கு எதிரான விஷயம் அல்லது நமது உரிமை இரண்டிலும் கட்டுப்பட வேண்டும். அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும். நீதி கிடைக்கவில்லை என்று கருதினால் மேலதிகாரியிடம் அல்லது காலத்தின் கலீஃபாவிடம் கொண்டு செல்லலாம். ஆனால் எந்நிலையிலும் கிளர்ச்சி செய்யக் கூடாது. எப்போது இந்த துஆவை செய்து வர வேண்டும்.

அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலுக்கேற்ப மார்க்க அடிப்படையிலும் சரி, உலகியலிலும் சரி நம்முடன் அன்புடன் நடந்து கொள்ளக்கூடிய மேலும் எவர்கள் மீது நாம் அன்பு கொண்டுள்ளோமோ அப்படிப்பட்ட ஆட்சியாளர் கிடைக்க வேண்டும். அவர் நமக்காக துஆ செய்பவராக இருக்க வேண்டும். நாம் அவருக்காக துஆ செய்பவராக இருக்க வேண்டும். பிறகு நாம் இறைவனது இந்த வழிகாட்டலுக்கு காரணமாக அமைய வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கியாமத் நாளில் கூறுவான். எவர்கள் எனது கம்பீரம் மற்றும் மகத்துவத்திற்காக ஒருவர் மற்றவரிடம் நேசம் காட்டினார்களோ அத்தகைய மக்கள் எங்கே? இன்று எனது நிழலைத் தவிர வேறு நிழல் இல்லை. நான் எனது கருணையின் நிழலில் அவருக்கு இடமளிப்பேன். (ஸஹீஹ் முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா வல்ஆதாப் பாபு ஃபீ ஃபஸ்லில் ஹுப்பீ ஃபில்லாஹித்தஆலா ஹதீஸ் 2566)

ஆகவே, எவருக்கு இறைவனது கருணையின் நிழலில் இடம் கிடைத்து விடுமோ அவருக்கு ஈருலக நிஃமத்துகளும் கிடைத்து விட்டன. நமது ஒவ்வொரு பணியும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காகவே இருக்குமாறு அல்லாஹ் செய்வானாக! நாம் இக்காலத்தில் அனுப்பப்பட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரின் ஜமாஅத்தில் இணைந்ததன் உரிமையை நிறைவேற்றுவோமாக!

மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இறைவன் உங்களை நன்மை மற்றும் நம்பிக்கையின் முன்மாதிரியாக விளங்கும் ஒரு ஜமாஅத் ஆக ஆக்க வேண்டும் என்று விரும்பினான். ஆகவே, நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். யதார்த்தமான நல்ல உள்ளமும் அடக்க இயல்பும் கொண்ட உண்மையான நம்பிக்கையாளராக ஆகி விடுங்கள். உண்மையின் தரம் மிகவும் உயர்ந்து விடட்டும். உங்கள் சபைகளில் எந்த அசுத்தமான எள்ளி நகையாடல்களும் கூடாது. அதாவது மக்கள் எள்ளி நகையாடுகின்றனர். அப்படிப்பட்ட சபைகளாக உங்கள் சபைகள் இருக்கக் கூடாது. நல்ல உள்ளம், தூய இயல்பு, நல்ல சிந்தனையுடன் பூமியில் நடங்கள். (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 47 பிரசுரம் எண்.188) மிக மிக பணிவு தேவை. நாம் நமது நிலைமைகளை இதற்கேற்ப ஆக்கியவாறு அல்லாஹ்வின் கருணையின் நிழலில் வருபவர்களாவோமாக!

★ ★ ★ ★ ★

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad